*(வலைப்பின்னல் மாற்றுமுறை)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# *1999 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, கைத்தொழில் பிணக்குகள் (திருத்தச்) சட்டம்*

---

*(1999 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1999, திசெம்பர் மாதம் 31 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** *குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 5.25** **தபாற் செலவு : ரூபா 3.50**

[*1999, ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*.]

*ச.வ.– ஓ. 16/95*

## கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

*சுருக்கப்பெயர்.*

**1**. இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, கைத்தொழில் பிணக்குகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*131 ஆம் அத்தியாயத்தில் **V**அ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துதல்.*

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் V ஆம் பாகத்தை உடனடுத்துப் பின்னர் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், அது அச்சட்டத்தின் V ஆம் பாகம் என்றவாறு பயனுறுதலும் வேண்டும் :–

"பாகம் **V** அ

*நியாயமற்ற தொழில் செயற்படுத்துதல்கள்*

*தொழில் தருநர்களால் நியாயமற்ற தொழில் செயல்படுத்தல்கள் செய்யப் படுவதனைத் தடுத்தல்.*

32அ. தொழில்தருநர் எவரும் –

(அ) ஒரு வேலையாளின் வேலையின் நிபந்தனையாக அவரை ஏதேனும் தொழில்சங்கத்தில் சேருமாறு அல்லது சேருவதைத் தவிர்க்குமாறு தேவைப்படுத்தவோ அல்லது அவர் ஓர் உறுப்பினராகவிருக்கும் ஒரு தொழில்சங்கத்தில் அவரின் உறுப்பாண்மையை மீளப்பெறுவதைத் தவிர்க்குமாறு தேவைப்படுத்தலோ ஆகாது ;

(ஆ) தொழிற்சங்கமொன்றின் உறுப்பாண்மை அல்லது தொழிற்சங்கத் தொழிற்பாடுகளில் அவர் ஈடுபட்டுள்ளமை காரணமாக மாத்திரம் ஒரு வேலையாளை வேலையிலிருந்து நீக்குதல் ஆகாது ;

(இ) ஒரு தொழிற்சங்கத்தில் ஒரு உறுப்பினராக, பதவிதாங்குநராக அல்லது பிரதிநிதியாக, வருவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து அவரைத் தடைசெய்யும் நோக்குடன் ஒரு வேலையாளுக்கு ஏதேனும் தூண்டுதலை அல்லது உறுதிமொழியை அளித்தலாகாது ;

(ஈ) ஒரு வேலையாளரை –

(i) தொழிற்சங்கமொன்றை உருவாக்குவதிலிருந்து ; அல்லது

(ii) நிதியுதவியளித்தல் அல்லது வேறுவழியில் ஒரு தொழிற் சங்கத்திற்கு ஆதரவு அளித்தலிலிருந்து, தடுத்தலாகாது.

(உ) ஒரு தொழிற்சங்கத்தின் தொழிற்பாடுகளைக் கொண்டுநடாத்துவதில் தலையிடுதலாகாது ,

(ஊ) ஒரு தொழிற்சங்கத்தின் எவரேனும் வேலையாளரை அல்லது பதவிதாங்குநரைப் பின்வரும் காரணங்களுக்காக வேலையிலிருந்து நீக்குதலோ அல்லது அவருக்கெதிராக வேறுவகையில் ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்தலோ ஆகாது :–

(i) ஏதேனும் நியாயசபையின் முன்னர் அல்லது அதிகாரத்திலுள்ள ஆள் முன்னர், நல்லெண்ணத்துடன் அத்தகைய வேலையாளரினால் அல்லது பதவிதாங்குநரினால் செய்யப்பட்ட ஏதேனும் கூற்றிற்காக ; அல்லது

(ii) தொழிற்சங்கத்தின் உறுப்பினர்களின் வேலை நிபந்தனைகளின் குறை தீர்ப்பை அல்லது தனித்தலைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்கென எழுந்த ஒரு கைத்தொழில் பிணக்கைப் பின்பற்றி அத்தகைய வேலையாள் அல்லது பதவிதாங்குநரினால் செய்யப்பட்ட அத்தகைய தொழிற்சங்கத்தின் உறுப்பினர்களின் ஊழியத்திலமர்த்தலின் நியதிகளும் நிபந்தனைகளும் தொடர்பாக தொழில்தருநரின் செயல்கள் அல்லது செய்யாது விடுதல்கள் தொடர்பான ஏதேனும் கூற்றுக்காக ;

(எ) எந்த வேலையாட்களின் சார்பாக பேரம்பேசுதலைத் தொழிற்சங்கமொன்று நாடியுள்ளதோ அந்த வேலையாட்களில் நாற்பது சதவீதத்துக்குக் குறையாத, எண்ணிக்கையினரை அதன் உறுப்பினராகக்கொண்ட ஒரு தொழிற்சங்கத்துடன் பேரம்பேசுவதற்கு மறுத்தலாகாது, இப்பந்தியின் நோக்கத்திற்காக, தொழில் ஆணையாளர் அல்லது அதன் சார்பில் அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலர் தொழில்தருநருடன் எந்த வேலையாட்கள் தொடர்பில் பேரம்பேசுதலைத் தொழிற்சங்கம் நாடுகின்றதோ அந்த வேலையாளர்களில் ஆகக்குறைந்தது நாற்பது சதவீதமானோராவது அத்தகைய தொழிற்சங்கத்தின் உறுப்பினர்களாக இருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக, ஏதேனும் வேலைத்தளத்தில் வாக்கெடுப்பு ஒன்றை நடாத்தலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவை திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவு, இத்தால், அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (த) என்னும் பந்தியை உடனடுத்துப்பின்னர், பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(தத) ஒரு தொழில்தருநராகவிருந்து 32அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளை மீறினால் ;"

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறைப் புரிகின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்தின்கீழ், (40) (1) (தத) என்னும் பிரிவின் கீழான தவறொன்றாக அல்லாத வேறு ஏதேனும் தவறைப் புரிகின்ற" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(1அ) பிரிவு 40 (1) (தத) என்பதன்கீழ் தவறொன்றைப் புரிகின்ற ஒவ்வோராலும் நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*